இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,973 — 1933 ம் ௵ பங்குனி௴ 24 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

Part IV. — நான்காம் பாகம்.

36

அரசாட்சியாரின் விளம்பரம்.

1901 ம் ஆண்டின் நாய்களைப் பதிவுசெய்வதைப்பற்றிய சட்டம்.

நாய்களைப் பதிவுசெய்வதைப்பற்றிய 1901 ம் ஆண்டின் 25 ம் இலக்கச் சட்டத்தின் 5 ம், 6 ம் பிரிவுகளின்படியும், 1920 ம் ஆண்டின் 11 ம் இலக்கச் சனுதிகார ஆட்சிச் சட்டத்தின் 245 ம் பிரிவின்படியும் பாணந்துறை பட்டின பாக்க மண்டலசபையாரால் உண்டாக்கப்பட்ட உபவிதிகள்.

ஈ. ஆர். டீ. குணதிலக,
பட்டின மண்டலசபை அக்கிராசனர்.

பாணந்துறை,
1933 ம் ௵ பங்குனி௴ 8 ந் தேதி.

உபவிதிகள்.

பாணந்துறைப் பட்டின மண்டலசபையின், பரிபாலன எல்லைக்குள் நிற்கும், ஒவ்வொரு நாய்களின் பொருட்டும், அந்த நாயை வைத்திருப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாயிருப்பவர் பதிவுப்பணமாக, ஒவ்வொரு ஆண் நாய்க்கும் அல்லது பெண் நாய்க்கும் சதம் 50 வருஷ வீதங் கட்டுதல் வேண்டும். இந்த உபவிதியின் நோக்கத்திற்காக, ஒரு வருஷம் என்பது எப்பிறில்௴ 1 ந் திகதி தொடக்கம் அடுத்த வருஷம் மார்ச்சு௴ 31 ந் திகதி வரையிலும் உள்ள காலம் எனக் கணக்கிடப்படும்.

2. குறித்த பட்டின மண்டலசபையின் பரிபாலன எல்லைக்குள் நாய் நிற்கும் வீட்டின் அதிகாரியாயுள்ள ஒவ்வொருவரும், அந்தந்த வருஷத்தில் ஜனவரி௴ 31 ந் திகதிக்கு முந்தியே மேற்படி சபையின் அக்கிராசனரால், நியமிக்கப்பட்டுள்ள வரியறவிடுபவரிடம் (Tax Collector) தம்மிடத்திலுள்ள நாயைக் குறித்த விபரங்கள் கீழே காட்டப்படும் "A" என்னும் அடையாளமிடப்பட்ட பத்திரத்திலே நிரப்பிக் கொடுத்தல் வேண்டும்.

3. கீழே காட்டப்படும் "B" என்னும் அடையாளமிடப்பட்ட சேட்டிவிக்கேற் பத்திரமொன்று பதிவுப்பணம் பெற்றவுடனே வரி அறவிடும் உத்தியோகஸ்தராலேனும் மேற்படி சபையின் காரியதரிசியாலேனும் கொடுக்கப்படும்.

4. (1) (*a*) தனது அபிப்பிராயப்படி ஒரு நாய் மிகவும் நோய்ப்பட்டதாயும் அதைப் பிடித்திருக்கும் நோய் மறு நாய்களுக்குத் தொத்தக்கூடியதாயும் இருக்குமாகில் அல்லது ;

(*b*) வயது முதிர்ந்து நோய்வாய்ப்பட்டு அல்லது ஊறடைந்து இருப்பதினால் அது உயிரோடு இருப்பது நன்றன்று என்பதாகக் காணப்படுமாகில் வரி அறவிடும் உத்தியோகஸ்தரேனும், காரியதரிசியேனும் பதிவுச் சேட்டிவிக்கேற் பத்திரங் கொடுக்க மறுக்கலாம்.

(2) அல்லது அவர்களின் எவராவது நாயின் நிலைக்குத்தக்க நிபந்தனைகளோடு சேட்டிபிக்கற் பத்திரம் கொடுக்கலாம். இங்ஙனம் கொடுக்கவில்லையென்றேனும் நிபந்தனைகள் விதித்தாரென்றேனும், எவராவது திருப்தியீனப்பட்டால் அவர் மேற்படி சபையின் அக்கிராசனரிடம் அப்பீல் முறையீடு செய்துகொள்ளலாம். அவ்வக்கிராசனர் அதை உறுதிப்படுத்தலாம், மாற்றலாம் அல்லது அழித்துவிடலாம்.

5. ஒவ்வொரு பதிவுச் சேட்டிவிக்கேற் பத்திரத்திலும் பின்வரும் நிபந்தனைகள் அச்சிடப்பட்டிருக்கும் அவையாவன :—

- (*a*) குறித்த நாய் மிகவும் நோய் பிடித்திருப்பதால் அல்லது அங்கவீனப்பட்டிருப்பதால் அது உயிரோடிருப்பது நல்லதல்லவென்று அக்கிராசனர் கண்டால் ;
- (*b*) சொந்தக்காரன் அந்த நாயைக் கொடுமையாக நடத்துகிறதாக அல்லது கவனியாது விடுகிறதாக அக்கிராசனர் கண்டால் ;
- (*c*) குறித்த நாய் தொற்றுவியாதியினால் பிடிக்கப்பட்டிருக்கிறபோது, சொந்தக்காரன் அதை மற்றும் நாய்களோடு ஊடாடித் திரியாவிட்டால் ; மேற்படி பாணந்துறைப் பட்டின மண்டலசபையில் அக்கிராசனரால் இச்சேட்டிவிக்கேற் பத்திரம் அழித்துவிடப்படுவதற்கு இடமானதாகும்.

6. (*a*) சேட்டிவிக்கற் பத்திரம் கொடாது விடப்பட்ட அல்லது, (*b*) அப்பத்திரத்தில் எழுதியுள்ள நிபந்தனையொன்று நிறைவேற்றப்படாததினால் சேட்டிவிக்கேற் பத்திரம் அழித்துவிடப்பட்ட நாயை வைத்திருப்பவர் அறிவித்தலில் குறிக்கப்பட்ட நேரத்தில் அந்த நாயைக் கொண்டுவந்து சங்கக் கந்தோரில் அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தரிடம் ஒப்பித்தல்வேண்டும். அக்கிராசனர் அந்த நாய்களின் விஷயத்தில் என்ன செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறாரோ அவ்வண்ணமே செய்தல் வேண்டும்.

போர்ம் "A".

நாய்களைக்குறித்த உபவிதிகளின்படி எழுதிக்கொடுக்கவேண்டிய விபரப் பத்திரம் :——.
வீட்டிலக்கம் :——.
தெரு :——.
வீட்டுக்காரனுடைய பெயர் :——.

வீட்டிலுள்ள நாய்களின் தொகை	விபரம்						சொந்தக்காரன் பெயர்	பணம் கட்டிய தேதி
	சாதி	ஆணோ பெண்ணோ	நிறம்	கழுத்தின் அளவு	ஏதும் விசேஷ அடையாளம்	குறிப்பு		
								மார்ச்சுமீ 31ந் திகதி யன்று அல்லது அதற்கு முன்

——————
வீட்டுக்காரனுடைய கையொப்பம்.

அறிவித்தல் ஒப்புவித்த தேதி :——
பாணந்துறை, 193 —— ம் ௵ ———— ௴ —— ந் தேதி.

மேற்சொல்லிய வீட்டுக்காரன் மேலேயுள்ள போர்ம் பத்திரத்தை ஒரு கிழமைக்குள் நிறப்பி அனுப்பும்படி கேட்கப்படுகிறார். அப்படிச் செய்யத் தவறும் எவரும் ரூபாய் 20 தெண்டம் இறுப்பதற்குப் பாத்திரர் ஆவர்.

——————
அக்கிராசனர்.
பட்டினமண்டல சபைக் கந்தோர்,
பாணந்துறை, 193 —— ம் ௵ ———— ௴ —— ந் தேதி.

போர்ம் "B".

நாய்களைப் பதிவு செய்ததைப்பற்றிய சேட்டிவிக்கேற் பத்திரம்.

பதியப்பட்ட இலக்கம் :——.

தெரு :——.

—— இலக்க வீட்டிலிருக்கும் —— என்பவர் கீழே விபரிக்கப் பட்டிருக்கும் மாதிரியான ஒரு $\frac{\text{ஆண்}}{\text{பெண்}}$ நாயை இன்று இந்தக் கந்தோரிற் பதிவுசெய்திருக்கிறார் என்றும் அதற்காக சதம் 50 பதிவுப் பணமாய்க் கட்டப்பட்டிருக்கிறதென்றும் இதனால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

நாயின் விபரம்.

சாதி :——.

ஆணோ பெண்ணோ :——.

நிறம் :——.

கழுத்தின் அளவு :——.

ஏதும் விசேஷ அடையாளம் :——.

இந்த சேட்டிவிக்கேற் பத்திரம் 19 —— ம் ஆண்டு (மார்ச்சு) பங்குனி மாசம் 31 ந் தேதி வரைக்கும் பெலப்புடையதாயிருக்கும்.

——————
காரியதரிசி.

பட்டின மண்டலசபைக் கந்தோர்,
பாணந்துறை, 193 ம் ஆண்டு பங்குனி௴ ந் தேதி.

அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அம்பேபுச ரவுணில் ஒரு கிணற்றுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 42. குறிச்சி—கினதேனிய.

துண்டு.	காணியினது பெயர்.	விபரம்.	உரித்தாளியின் பெயர்.	விசாலம். ஏ.	றூ.	ப.
2	கலபொடவத்த ..	தோட்டம், ஒரு கிணறு உள்ளது ..	கனந்தங்கிய மிஸ்றர். டி. எஸ். சேனநாயக்க, போத்தல	0	0	0·9

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவாகள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ௵ சித்திரை மாசம் 27 ந் தேதியிலன்று 3 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்பு கச்சேரி,
1933 ம் ௵ பங்குனி௴ 20 ந் ௳.

ஆர். எஸ். வீ. பொலியர்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாவில்மட கிராமத்தில் ஒரு சுவபாஷா பாடசாலை கட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 11. குறிச்சி—மாவில்மட, கண்டி நகரசங்க எல்லைக்குள், கண்டி டிஸ்திறிக்.

துண்டு.	காணியினது பெயர்.	விவரம்.	உரித்தாளியின் பெயர்.	விசாலம். ஏ.	றூ.	ப.
1	இறஅம்பெஹேன அல்லது இல்லுக்க காணியிலக்கம் 208 (மாவில்மட)	வெளியான பாழ்நிலம்	பணிக்கிஹேனயாலெகெதற அல்லது ஹாலு அப்புலானஹேனயாலெகெதற குடஹேனவின் உரித்தாளிகளான லென்சுவஹேனய, கிரிஉக்குவாஹேனய பினஹேனய, குடறிட்டி என்பவரும் சேன அல்லது சிறிசேனவும்	0	3	33·6
2	இறஅம்பெவத்த, காணியிலக்கம் 209 (மாவில்மட)	தோட்டம்.	ஹாலு அப்புலானஹேனயாலெகெதற அல்லது இஹலஹேனகெதற கிரிஉக்குவாவும், தானியா மெனிக்கீ என்னும் இரு பிள்ளைகளும், ஹாலு அப்புலானஹேனயாலெகெதற அல்லது இஹலஹேனகெதற லென்சுவாவெதஹேனயவும்	0	3	15

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம ௵-த்து காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ௵ ஏப்றில் ௴ 21 ந் தேதியிலன்று பின்னேரம் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1932 ம் ௵ மார்ச்சு ௴ 20 ௳.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஹந்துகலயில் ஒரு பாடசாலைக்குக் கட்டடம் கட்ட என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 71. குறிச்சி—ஹந்துகல.

துண்டு.	காணியினது பெயர்.	விபரம்.	உரித்தாளியின் பெயர்.	விசாலம். ஏ. றூ. ப.
3ʟ1	வல்மகவதத அல்லது இஸ்கோலேவதத	மரக்கறி தோட்டம்,மண்ணுற் கட்டியிருக்கும் பாடசாலை உபாத்தியாயர் வீடும் குசினியும்	கம்புருபிட்டி எல். டீ. ஸேதரு, ஹந்துகல திப்பொடுதெனி கன்காணம்கே அன்திறிஸ், திப்பொடுதெனிய கன்காணம்கே ஜன்திஸ் குலசிங்கே ஜேமிஸ், போகம் உண்டுபண்ணியது வீ. ஜீ. ஜயவர்தன பிரதான உபாத்தியாயர் ஹந்துகலை, ஊர் மனிதரால் கட்டி டிஸ்திறிக் கல்வி கொமிட்டியாரால் நடத்தப்படும் கட்டுமானம்	0 1 35·6

20

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ௵ வைகாசி மாசம் 4 ந் தேதியிலன்று காலமே 10 மணிக்கு கிறமதானையத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்மான்தோடைக் கச்சேரி,
1933 ம் ௵ பங்குனி ௴ 14 ௳.

எப். லீச்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஹெட்டிமுல்ல—ஹத்கம்பல றோட்டில் 3/7 பாலத்துக்குக்கிட்ட இருக்கும் றோட்டை மாற்றுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 2. குறிச்சி—தெபத்கமஉடபாகே.

துண்டு.	காணியினது பெயர்.	விவரம்.	உரித்தாளியின் பெயர்.	விசாலம். ஏ. றூ. ப.
1	கிதுல்தெனிய	றோட்டு (புது)	எஸ். பீ. ரன்கிரா	0 0 1·5
2	ஷை	வயல் காணி	ஷை	0 0 2·4
3	வதுகன்தெனிய	ஷை	ஆர். பீ. கிரிஉக்குவா, ஆர். பீ. ரத்தரன, ஆர். பீ. சேதுவாவும், ஜீ. எச். செந்தியா	0 0 2·4
4	ஷை	றோட்டு (புது)	ஷை	0 0 21·6
5	ஷை	வயல்	ஷை	0 0 3·3
6	ஷை	வயல்	ஆர். பீ. ரத்தரன, ஆர். பீ. சேதுவா, ஆர். பீ. சிரிபின, ஆர். பீ. கியாதுவா, ஆர். பீ. சிரிமளி, ஆர். பீ. உக்குஅம்மாவும், ஆர். பீ. லயிசா	0 0 1·7
7	ஷை	றோட்டு (புது)	ஷை	0 0 4·1
8	ஷை	வயல்	ஷை	0 0 1

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ௵ மே மாசம் 2 ந் தேதியிலன்று 10 மணிக்கு கேகாலை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலை கச்சேரி,
1933 ம் ௵ பங்குனி ௴ 13 ௳.

ஈ. எச். லுசெற்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

1931 ம் ஆண்டின் காணயுரிமை நிர்ணயச் சட்டம்.

காணயுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 375 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைதகேனும் தமக்கு உரித்துண்டென்று 1933 ம் ௵ (மார்ச்சு) பங்குனி ௴ 24 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிகுரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்ய வேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1933 ம் ௵ (பெப்ரவரி) மாசி ௴ 22 ந் தேதியிலன்று கண்டிக் கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசன்ற, கண்டி.

குறிப்பு—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அவைகளின் அளவைப்படம் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், கரிஸ்பத்து பகுதி, கலசியபத்து கோறளையில் மெட்கொட கிராமத்திலிருப்பதும் கீழ்க்காணும் எல்லைக்குட்பட்டதுமான காணித்துண்டுகள் :

வடக்கு : டி. எம். டிங்கிரிபண்டாவும் மறுவும் உரித்தாடும் உனமேகேனையும், யு. பி. மெடகொடகோறளை உரித்தாடும் அலகொடதெனியகும்புறவும் ;

கிழக்கு : ரிக்கிரிகுமாரிகாமி உரித்தாடும் கல்கெட்டிய கெல்லகேன ;

தெற்கு : ரிக்கிரிகுமாரிகாமி உரித்தாடும் அத்தலகாகும்புற ;

மேற்கு : வத்தறம்பேளலா, எம். உக்குமெனிக்கா உரித்தாடும் விகாரகெதறகேன, டி. எம். டிங்கிரிபண்டாவும் மறுவும் உரிததாடும் உனமேகேன.

பிரதமபட இல. 6,089.

காணித் துண்டு.	காணியின் பெயர்.	விசாலம். ஏ.	றூ.	ப.
268	வலறம்பேகேன (ஏலாவுக்கும் ஆற்றுக்கும் சேமித்தது)	0	3	12
269	வலறம்பேவன	0	1	14
		1	0	26

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 376 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1933 ம் ௵ (மார்ச்சு) பங்குனி௴ 24 ௳ தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1933 ம் ௵ (பெப்ருவரி) மாசி௴ 22 ௳ தேதியிலன்று கண்டிக் கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசன்ற், கண்டி.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், பாத்ததீவகற்ற பகுதி. கந்தகாயகோறளை தெற்கிலுள்ள புதவத்த கிராமத்திலிருப்பதும் கீழ்காணும் எல்லைகளுக் குட்பட்டதுமான காணித்துண்டுகள் :—

வடக்கு : எச். அப்புகாமி, டபிள்யு. கிரிபண்டாவும் மறுவும் உரித்தாடும் கொல்லன்வல்பிட்டி, கன்சபா பாதை ;

கிழக்கு : எஸ். சின்னையா உரித்தாடும் கொல்லன்வல்பிட்டி ;

தெற்கு : எச். அப்புகாமி, டபிள்யு. கிரிபண்டா மறுவும் உரிததாடும் கொல்லன்வலபிட்டி, கன்சபா பாதை.

மேற்கு : ஈ. அப்புகாமியும் மறுவும் உரிததாடும் கொல்லலன்வல்பிட்டி.

பிரதமபட இல. 9,145.

காணித் துண்டு.	காணியின் பெயர்.	விசாலம். ஏ.	றூ.	ம.
1	கொல்லன்வல்பிட்டி ..	0	0	33·6
2	கன்சபா பாதை	0	0	1·6
		0	0	35·2

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 377 (நுவரெலியா).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதின் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1933 ம் ௵ (மார்ச்சு) பங்குனி௴ 24 ௳ தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டிருப்பவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1933 ம் ௵ (பெப்புறுவரி) மாசி௴ 1 ௳ தேதியிலன்று நுவரெலியாக் கச்சேரியில் இவ்வறிவித்தல் கொடுக்கப்பட்டது.

டபிள்யு. ஜே. எல். ரேஜர்சன்,
உதவி அரசாட்சி ஏஜன்ற்.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிக்மான விபரத்தை நுவரெலியா உதவி அரசாட்சி ஏசென்ற அவர்களிடமும் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனரல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், நுவரெலியா டிஸ்திறிக், உடகேவ கெற்றபிரிவு, கங்கபலாத்த கோறளை மனுல்ல கிராமத்திலுள்ள பின்னாற் சொல்லப்படுங் காணித்துண்டுகள் :—

I.—பிரதம்படம் 8,755.

காணித் துண்டு.	காணியினது பெயர்.	விசாலம், ஏ.	றூ.	ப.
2	ககற்றககபிற்றியவத்தை (கிராமக்கொம்மிற்றியாரின் ரேட்டோரம் சேமிப்புநிலம்)	0	0	7
3	ஷை	0	0	7
	மொத்தம் ..	0	0	14

எல்லைகளாவன: வடக்கு: பி. கலுமெனிக்காவால் உரிததாடப்படும் ககற்றககபிற்றியகேனவும் உக்குபண்டாவானும் பிறரானும் உரித்தாடப்படும் ககற்றககபிற்றியகேனவும் ; கிழக்கு : மனுல்லகுடிகெதறகும்புறகெதற அப்புகாமியால் உரித்தாடப்படும் ககறறககபிற்றியவத்தை துண்டு (4 பிரதமபடம் 8,755); தெற்கு-உடவத்தைகுடிநாறன்கஸ்முல்லகெதற டிங்கிரிபண்டாவால் உரித்தாடப்படும் ககற்றபிற்றியவத்தை) துண்டு 6 பிரதமபடம் 8,755), மனுல்லகுடிபுவாக்ககும்புறகெதற சீயற்றுவால் உரித்தாடப்படும் ககற்றகக்பிற்றியவத்தை (துண்டு 7 பிரதமபடம் 8,755); மேற்கு-கென்கல்லகுடி. அமராவதி றனசிங்ககாமினியால் உரித்தாடப்படும் ககற்றககபிற்றியவத்தை (துண்டு 1 பிரதமபடம் 8,755).

II.—பிரதமபடம் நி. 8,755.

காணித் துண்டு.	காணியின் பெயர்.	விசாலம். ஏ.	றூ.	ப.
14	கிண்டுகலகந்தை	82	0	14
15	ஷை	68	0	27
	மொத்தம் ..	150	1	1

எல்லைகளாவன : வடக்கு-கொக்குறுத்தலை . கிராமத்தின் எல்லை, கங்குறன்கெற்றையிலிருந்து உடவத்தைக்குப் போகும் கன்சபாபாதை, கிண்டகலைகந்துறை, கோனப்பிற்றியிலிருந்து உடவத்தைக்குப்போகும் கன்சபாரேட்டு ; கிழக்கு-கில்பென்கந்துறை ; தெறகு-மலகந்துறை உடவத்தை கிராமத்தின் எல்லை ; மேற்கு-கொடமுடுனைகலகிரியகேனை எனப்படும் காணி, மலைகந்துறை, கொக்குறுத்தலை கிராமத்தின் எல்லை.

III.—பிரதபடம் நி. 8,755.

காணித் துண்டு.	காணியின் பெயர்.	விசாலம். ஏ.	றூ.	ப.
12	கிக்கப்பிற்றியவத்தை	0	0	8
13	வேவகாவகலை	29	1	7
16	ஷை	13	2	12
17	ஷை	17	1	33
18	மல்லுல்லவேவ	7	3	35
	மொத்தம் ..	68	1	15

எல்லைகளாவன: வடக்கு-நரங்கஸ்முல்லைகெதற டின்கிரி பண்டாவினால் உரித்தாடப்பட்ட ககாட்டகாபிற்றியவத்தை யெனப்படும் காணி, (பிரதமப்படம் நி. 8,555 ரின் ஆருவதும் 5 ந்தாதுமாகிய துண்டுகள்), க. யுக்குபண்டாவாலும் மற்றவர்களாலும் உரித்தாடப்பட்ட ககாட்டைகாபிற்றியசேனை கிரி பண்டாவால் உரித்தாடப்பட்ட கொடமுடுசேனை, கிழக்கு-டபிள்யு. கேறத்காமியினால் உரித்தாடப்பட்ட கொடமுடுன சேனை உடவத்தை யென்ற கிராமத்தின் எல்லை, தெற்கு-காலங்கதையிலிருந்து கங்குரன்கெற்றைக்குப்போகும் டிஸ்திறிக் கொம்மிற்றி ரோட்டு, கங்குரன்கெற்றையிலிருக்கும் ஆர். ஈ. எஸ். டி. சொய்சாவால் உரித்தாடப்பட்ட கல்பொக்கை, உரிமைப்படம் நி. 51,743) புருகல்சேனையின் பழைய பாதை, காலஞ்சென்ற முகான்திரம அபயகுணசேகரவின் உரித்தாளர்களால் உரித்தாடப்பட்ட பெரக்கெல (உரிமைப்படம் நி. 90,115 ம் 88,152 ம் முடியினால் உரித்தாடப்பட்ட வேவகாவத்தை (பிரதமபட நி. 8,555 இன் 19 ம் துண்டு) கெதறகும்புறகெதற முடியான்சேயால் உரித்தாடப்பட்ட வேகெற்றிய அல்லது முல்ஓலியவத்தகேனே (உரிமைப்படம் நி. 91,890), முடியினால் உரித்தாடப்பட்ட காணி, கங்குரன் கெற்றையிலிருந்து கோனகாம்பிற்றிக்குப் போகும் கன்சபா ரோட்டு, ஒற்றையடிப்பாதை, கே. அப்புகாமியால் உரித்தாடப்பட்ட குப்பளவத்தை, றி. பி. இலங்கத்திலகவாலும் மற்றவர்களாலும் உரித்தாடப்பட்ட நிக்கப்பிற்றியகேனே, றி. பி. இலங்கத்திலக பிறக்கிருசியாரால் உரித்தாடப்பட்ட நிககபிற்றியவத்தை, (பிரதமப்பட நி 8,755 இன் 11 ந் துண்டு), எஸ். டிங்கிரியம்மையாலும மற்றவாகளாலும் உரித்தாடப்பட்ட ககாற்றககாபிற்றியகேனே.

காணி பண்படுத்தலைப்பற்றிய அறிவித்தல்.

தப்போவை குளத்தின் கீழ் உள்ள காணிகள் பங்கீடுசெய்து கொடுத்தற்கான ஒழுங்கு சம்பந்தமான அறிவித்தல்.

புத்தளத்துக்குக் கிழக்காக ஏறக்குறைய 8 மைல் தூரத்திலுள்ள தப்போவை குளத்தின்கீழ் நெல்வேளாண்மை செய்வதற்கு ஏற்ற காணித்துண்டுகள் கேட்பதற்கு அனுப்பப்படும் விண்ணப்பப்பத்திரங்கள் 1933 ம் ௵ (ஏப்பிறல்) சித்திரை மாசம் 22 ந் தேதிவரையிலும் ஏற்றுக்கொள்ளப்படுமென்று இதனால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் எழுத்து மூலமாக புத்தளம் உதவி கவண்மேந்து ஏஜன்றருககு மேல் விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டியதுமன்றி, விண்ணப்பக்காரர் தங்கள் முழுப் பெயர்களையும் மேல் விலாசங்களையும் எழுதியனுப்பவும் வேண்டும். 1933 ம் ௵ (ஏப்பிறல்) சித்திரை மாசம் 22 ந் தேதியின் பின் காணி பங்கிட்டுக் கொடுப்பதற்கு விண்ணப்ப சாரரைத் தெரிவு செய்யும் பொருட்டாக ஒரு காணிக் கச்சேரி ஸ்தாபித்து நடத்தப்படும். இந்தக் கச்சேரியைக் குறித்து அறிவித்தல் முன்னதாகக் கொடுக்கப்படும். விண்ணப்பப் பத்திரங்களோடு வைப்புப் பணத்தொகைகள் அனுப்பப்பட வேண்டியதில்லை.

2. மேட்டுப் பூமிகளும் நெற் காணிகளும் பங்கீட்டுக் கிடைக்கக் கூடியனவாயுண்டு, கவண்மேந்து உதவி ஏஜன்றர் தமது நற்கருத்தின்படி எந்த விண்ணப்பத்தையும் அங்கீகரியாது தள்ளி விடலாம். மேலும் அவரே தெரியப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பக்காரனுககும் கொடுக்கப்பட வேண்டிய காணியின் விசாலம் எவ்வளவென்றும் தெரியப்பட்ட விண்ணப்பக்காரருக்கு காணித்துண்டுகள் எவ்வண்ணம் பங்கீடு செய்துகொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானிப்பதுமன்றி அப்பங்கீடு சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் அவர் செய்யும் தீர்மானம் முடிவானதாகவும் இருக்கும்.

3. இக்காணிகளும் வேறு காணிகளும் பங்கீட்டிற் பெறுபவர்களுக்கு ஆட்சி நிலையானதாகவிருக்கச்செய்யும் நோக்கமாக ஒரு சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று ஆலோசிக்கப்படுகின்றது. இந்தச் சட்டம் விதிக்கப்பட்டதின்பின் அது இக்காணிகளுக்கு ஏற்புடையதாக வருமென்றும் சட்டம் வழங்கத்தொடங்குவதற்குமுன் கொடுககப்பட்ட எவ்வுத்தரவுச் சீட்டுகளினதும் பொருத்தங்களையும் நிபந்தனைகளையும் அது மாற்றக்கூடுமென்றும் விண்ணப்பக்காரருக்கு இதனால் அறிவிக்கப்படுகின்றது. இந்தச் சட்டம் விதியாக்கும் வரையிலும் பங்கீடுகள் பெறத் தெரியப்படுவர்களுக்கு காணியை ஆட்சிகொள்வதற்கு உத்தரவுச்சீட்டுக்கள் கொடுக்கப்படும். இவ்வுத்தரவுச்சீட்டுககள் பின்சொல்லிய நிபந்தனைகளுக்கு அமைவாகவிருக்கும், அவையாவன: —

(1) உத்தரவுச் சீட்டு ஐந்து வருஷத்துக்குக் கொடுக்கப்படும்.

(2) உத்தரவுச்சீட்டுப் பெற்றவர் முதல் வருஷத்துக்குள் நெற்காணியைச் செய்கை பண்ண வயலாக்கவும் மேட்டுப்பூமியைச் செய்கை பண்ணித் திருத்தவும் தொடங்கி, உதவி கவண்மேந்து ஏஜன்றரின் திருப்திக்கு ஒவ்வொரு வருஷமும் அவ்வேலையைச்செய்து நடத்தி ஐந்தாம் வருஷ முடிவோடு அதைச் செய்துமுடிக்க வேண்டும். அதன்பின் குறைந்த பட்சம் காணியில் நாலில் மூன்று பங்கையாகுதல் ஒவ்வொரு வருஷம் அவர் செய்கைபண்ண வேண்டும்.

(3) உத்தரவுச் சீட்டுடையவர் வருடாநதம் ஒரு ஏக்கருக்கு வருடாந்தக் குத்தகைப் பணம் ஐம்பது சதம் முற்பணமாய்க் கொடுக்கவேண்டும்.

(4) உத்தரவுச்சீட்டுடையவர் நிலத்தை ஆட்சிகொண்ட மூன்றும் வருடத்தின்பின் தண்ணீர் பாச்சலுள்ள நிலங்களுக்கு அரசாட்சியாரால் தீர்மானித்தபடி தண்ணீர்பாச்சல் வரி இறுக்கக் கடமைப்பட்டவராவர். முதன்முறை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2 க்கு மேலாகத் தண்ணீர்பாச்சல்வரி அறவிடப்பட மாட்டா.

(5) உத்தரவுச்சீட்டுப் பெற்றவர் இப்பொழுது வழங்கி வரும் அல்லது இனிமேல் நியாயமுறையாக உண்டாக்கப்படும் எல்லா நீர்பாச்சல் விதிகளுக்கும் பயிர்ச்செய்கை விதிகளுக்கும் உட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

(6) உத்தரவுச்சீட்டுப் பெற்றவர் காணியிலுள்ள வெட்டு மரங்களை வேலியடைப்பதற்கு அல்லது காணியில் காவற்கொட்டில்கள் அல்லது வீடுகள் கட்டுவதற்கு உபயோகிக்க உரித்துடையவர். ஆயினும், உத்தரவின்றி அக்காணியிலிருந்து யாதேனும் வெட்டுமரம் கொண்டுபோக அவருக்கு உரித்து யாதும் இல்லாதிருத்தல் வேண்டும். விலைகொடுத்தல் அல்லது வேறு காரியங்களைப்பற்றித் தீர்மானிக்கப்படும் பொருத்தங்களுக்கமைவாக அவவுத்தரவு கொடுக்கப்படும்.

(7) உத்தரவுச்சீட்டுடையவர் உதவி அரசாட்சி ஏஜன்றரின் திருப்திக்கேற்றபடி தமக்கென்று விடப்பட்ட நிலத்தில் ஓர் வீடு கட்டி அதில் வாசம் செய்தல் வேண்டும்.

(8) உத்தரவுச்சீட்டுப் பெற்றவர் கவண்மேந்து ஏஜன்றரின் உத்தரவின்றி இந்த உத்தரவுச்சீட்டின்படி தமக்குள்ள எச்சோந்தைகளையும் எவ்வகையாகவேனும் பராதீனப்படுத்தவாவது ஈடுவைக்கவாவது அல்லது வேறுவகையாகக கொடுத்துவிடவாவது கூடாது. அப்படியான பராதீனப்படுத்தல், ஈடு அல்லது கொடுத்துவிடுகை எதுவும் பெலனற்றதும் பெறுமதியற்றதும் ஆகும்.

(9) உத்தரவுச்சீட்டுப் பெற்றவர் உத்தரவுச்சீட்டின் நிபந்தனைகளில் எதையும் செய்து நிறைவேற்றத் தவறுமிடத்து அல்லது உத்தரவுச்சீட்டுப் பெற்றவருக்கு மாறாகக் கொடுக்கப்பட்ட ஒரு கோட்டுத்தீர்வையை நிறைவேற்றுவதில் அக்காணி அல்லது உத்தரவுச்சீட்டுப் பெற்றவருககுரிய சோந்தைகள் பிடிக்கப்படுமிடத்து அல்லது விற்கப்படுமிடத்து, உதவி கவண்மேந்து ஏசன்றர் உத்தரவுச்சீட்டை அழித்துவிட்டு காணியையும் அதிலுள்ள விளைவுகள், தோட்டங்கள் கட்டடங்கள் அல்லது வேறு திருத்திய பொருட்கள் எவைகளையும் தம் ஆட்சியில் ஒப்புக்கொள்ளலாம். இன்னமும் உத்தரவுச்சீட்டுப்பெற்றவரால் அல்லது வேறெவராலும் காணியிற் செய்யப்பட்டுள்ள திருத்தங்களுககாக யாதும் நஷ்டபூர்த்தி பெறுவதற்கு உததரவுச்சீட்டுப்பெறறவருக்கேனும் அவர் மூலமாக உரித்துப்பேசும் வேறெவருக்கேனும் யாதும் ஒரு உரித்தும் இருககமாட்டாது.

(10) ரோட்டுக்கள் திறக்கவேனும் கால்வாய்கள் வெட்டவேனும் அல்லது வேறெந்த நோக்கத்துக்கேனும் அரசாட்சியாருக்கு இனிமேல் தேவைப்படக் கூடியதாயுள்ள தயக்குப் பங்கீடுசெய்து விடப்பட்ட காணியின் எப்பாகத்தையும் உத்தரவுச்சீட்டுப்பெற்றவர் யாதும் நஷ்டபூர்த்தி கேளாமல் ஒப்புவித்து விடல் வேண்டும்.

(11) இந்த உத்தரவுச்சீட்டு பாவினையிலிருக்கும் காலத்தில் இந்த உத்தரவுச் சீட்டுப்பெற்றவர் மரணிக்கச் சம்பவித்தால் உதவி அரசாட்சி ஏசன்று புதிய உத்தரவுச்சீட்டு கொடுப்பதற்காக தனக்கு விருப்பப்பட்ட ஒருவரை ஏற்படுத்தவேண்டும்,

(12) இந்த உத்தரவுச்சீட்டு, உத்தரவுச்சீட்டுப் பெற்றவர்ககுரியதாயிருக்கும். அது அவர் மரணிப்போடு முடிவாகிவிடும்.

(13) மேலே சொல்லப்பட்ட சட்டம ஏற்படுத்திப் பயனுக வருவதில் இந்த உத்தரவுச் சீட்டு முடிவுக்கு வராமல் வேறு எவ்வகையால் முடிவுக்கு வந்தால் அந்தக்காணி திரும்பவும் முடிக்குரியதாகி விட வேண்டும். இந்தக் காணியில் ஏதும் திருத்தம் செய்ததற்காக அரசாட்சியாரிடம் நஷ்டபூர்த்தி கேட்க எவருக்கும் உருத்தில்லை.

(14) உத்தரவுச் சீட்டு பெற்றவரின் மரணிப்பால் அவரின் உத்தரவுச் சீட்டு முடிவுக்குவரச் சம்பவிக்கும் காலத்தில் அவரால் ஏற்படுத்தப்பட்டவர் தகுதியுள்ளவரென்று நிதானித்தால் அவருக்கு அல்லது காலஞ்சென்ற உத்தரவுச்சீட்டு பெற்றவருடைய பராபரிப்புக்குட்பட்டவரில் ஒருவருக்கு அல்லது வேறு எவருக்காவது ஒரு புதிய உத்தரவுச் சீட்டு உதவி அரசாட்சி ஏசன்டரின் இஷ்டப்படி கொடுக்கப்படுவார்.

சீ. வீ. பிறேன்,
கர்ணிக் கொம்மிஷனர்.

கொழும்பு; 1933 ம் ௵ பங்குனி௴ 21 ந் தேதி.

கேள்விப் பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

இத்தாலறிவிப்பது வடமாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணக் கச்சேரியில் பின்னும் சொல்லப்படும் துறை ஆயகுத்தகையை 1933 ம் ஆண்டு சித்திரை மாதம் 1 ந் திகதி, தொடக்கம் புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரைக்கும் விலைக்கு வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1933 ம் ஆண்டு பங்குனி மாதம் 29 ந் திகதி புதன்கிழமை மத்தியானம் 12 மணியளவில் ஏற்கப்படும்.

பண்ணைத் துறை.

பத்திரங்கள் கேள்விக்காரரால் நேரே கொடுபட வேண்டும். தபால் வழியாய் அனுப்பப்பட்டவையுங் குறித்த நேரந்தேதியின்பின் கிடைப்பவையுங் கவனிக்கப்படா.

ஒப்புக்கொள்ளப்படுங் கேள்விக்காரன் கேள்வித்தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேண்டும். உத்தம தேசாதிபதியவர்களால் கேள்வி ஏற்கப்பட்டால் கேள்விக்காரன் தனக்கு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 20 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதி பெற்ற ஆதனப் பிணையேனுங் காசாய் கேள்வித் தொகையில் மூன்றிலொரு பங்கு பிணையேனுங் கட்டவேண்டும்.

கவண்மேந்து ஏசன்றர் விற்பனவிலன்று தீர்மானிக்கிற பிரகாரம் பாதைகளைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய பணத்தைப் பிணையாகக் கேள்விக்காரன் கட்டவும்வேண்டும்.

முடிக்குரிய தரணி பிணையாகக் கொடுபடும் உறுதி முதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதி போடுவதற்கும் உரிய செலவு ஆதனங்களை விலைமதித்தல் முதலியவைகளால் வரும் செலவும் பிணை உறுதிக்கு ஒட்டவேண்டிய முத்திரைச் செலவும் கேள்விக்காரன் கட்டவேண்டும்.

பிணையாகக் கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடு முதலியவைகட் குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில் நிலப்பதிவு கந்தோரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக்கொடுக்கவேண்டும்.

யாழ்ப்பாண ஏசண்டரிடம் தேவையான மேலதிகமான விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம். போதிய கேள்விகள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கப்பட்டவுடன் அன்றையத்தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பீ. மோட்டிமர்,
கவுண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி.
1933 ம் ஆண்டு பங்குனி௴ 21 ந் திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.